[1975 மார்ச் 21

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இந்த குடியாத்தம் தீ விபத்து சம்பந்தமாக மிகவும் நல்ல முறையில் நம்முடைய அரசு உதவி செய்கிறது. இருந்தாலும் கூட அதிலே சிலபேர் விடுபட்ட நிலையிலே இருக்கிறார்கள். சங்கம் அமைப்பது பற்றிச் சொன்னார்கள். அந்தச் சங்கங்களுக்கு ஷேர் கேபிடல் கூடச்செலுத்த முடியாமல் இருப்பவர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு, சில காரணங்களால் விடுபட்டிருப்பவர்களுக்கு, அரசாங்கமே ஏற்று சங்கங்கள் அமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 245 நெசவாளர்களைக் கொண்ட ஒரு கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இன்னொரு கூட்டுறவுச் சங்கத்திற்கும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

திரு அ. ஆறுமுகம் : தலைவரவர்களே, இதுபோல் நெசவாளர்களின் வீடுகள் எரிந்துவிட்டால் 80 ரூபாய் கொடுக்கப்படுவதில் உடனடியாக வீடு கட்டிக்கொள்ள முடிவதில்லை. ஆகவே, அரசாங்கத்திலுள்ள புறம் போக்கில் இருக்கின்ற பனை மரங்களை வெட்டிக்கொள்ள அரசு அனுமதிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது குறிப்பிட்ட ஒரு ஊரிலே நடந்த நிகழ்ச்சி. இதற்கென்று தனியான முயற்சிகளை நாம் எடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்த குடியாத்தம் நெசவாளர்களுக்கு ஏற்பட்ட தீ விபத்தால் பாதிக்கப்பட்ட சொத்தின் மொத்த மதிப்புத் தொகை எவ்வளவு? அதற்கு பிரதம மந்திரி நிதியிலிருந்து எவ்வளவு தொகை அளிக்கப்பட்டிருக்கிறது? முதலமைச்சரவர்கள் நிதியிலிருந்து எவ்வளவு தொகை அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பிரதம மந்திரியிடத்திலிருந்து ஒரு இலட்சம் ரூபாய்; நம்முடைய மாநிலத்திலிருந்து ஒரு இலட்சம் ரூபாய். பல்வேறு உதவியும் செய்திருக்கிறோம். தனிப்பட்ட நபர்களும் உதவி செய்திருக்கிறார்கள்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, இந்தத் தீ விபத்தின் காரணமாக பலபேர்கள் தங்களுடைய தறிகளையும், வீடுகளையும், நூல்களையும் இழந்திருக்கிறார்கள். அந்த இழப்பை சரிக்கட்டுவதற்காக ஏதாவது டொனேஷன் மூலம் நிதி சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு வாழ்வு அளிக்க எந்த அளவிற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த விவரங்களை இப்பொழுது தான் விவரமாகச் சொன்னேன். கிட்டத்தட்ட 4 இலட்சத்து 93 ஆயிரம் ரூபாய்க்கு நாம் உதவி செய்திருக்கிறோம்.